அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை : 23/2020

எனது இலக்கம் : EST- 6/04/LON/0207

பொது சேவை, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2020.12.30

அமைச்சுக்களின் செயலாளர்கள்
இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாணங்களின் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான விசேட முற்பணங்கள் - 2021 ஆம் ஆண்டு**

2015.12.29 ஆம் திகதிய அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை 26/2015 தொடர்பில் உமது அவதானத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

02. அச்சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியில் 2015 ஆம் ஆண்டு என்பதற்குப் பதிலாக 2020 ஆம் ஆண்டு என்பதைப் பதிலீடு செய்வதற்கும் 2016 ஆண்டு என்று குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து இடங்களிலும் 2021 ஆம் ஆண்டு என்று பதிலீடு செய்வதற்கும் உட்பட்ட வகையில் அச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க 2021 ஆம் ஆண்டுக்காக 4000/- ரூபாவுக்கு மேற்படாத விசேட முற்பணக் கொடுப்பனவொன்றை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

03. இந்த முற்பண வழங்கலை 2021.01.01 ஆம் திகதி ஆரம்பித்து 2021.02.28 ஆம் திகதி பூர்த்தி செய்ய வேண்டும் என்பதுடன், 2021.02.28 ஆம் திகதியின் பின்னர் இந்த முற்பணக் கொடுப்பனவு வழங்கப்படக் கூடாது. இந்த முற்பணத்தை 2021 ஆம் ஆண்டிலேயே அறவிட்டு முடிப்பது அவசியமாகும்.

04. 2020.03.26 ஆம் திகதிய அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை 07/2020ன் ஏற்பாடுகளுக்கு இணங்க அறவிடப்படாத அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு 2020 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட விசேட முற்பணங்களின் ஏப்ரல் மற்றும் மே மாதத் தவணைப் பணங்களை 2021 ஆம் ஆண்டின் தவணைகளுடன் சேர்த்து அவ்வருடத்திற்குள்ளேயே அறவிட்டு முடிப்பது அவசியமாகும்.

05. இந்த சுற்றறிக்கை பொதுத் திறைசேரியின் ஒப்புதலுடன் வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்/. ஜே.ஜே. ரத்னசிரி
செயலாளர்
பொது சேவை, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு